இந்து தமிழ் திசை - 08/01/2025

# ஆன்லைனில் இலவச படிப்பு ஏஐசிடிஇ அறிவுறுத்தல்

சென்னை

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (ஏஐசிடிஇ) துணைத் தலைவர் எம்.பி.பூண்டியா வெளியிட்ட அறிக்கை:

சர்வதேச அளவில் உள்ள பல் வேறு படிப்புகளை ஆன்லைனில் இலவசமாக வழங்கி வருகிறோம். இது மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் பயனுள்ள தாக இருக்கும். https://collection.bccampus.ca/, https://openstax.org, https://www.ecampusontario.ca/, https://www.skillscommons.org/, https://libretexts.org/, https://www.saylor.org/ ஆகிய இணையதளங்கள் மூலம் இலவச மாக பயன்படுத்திக் கொள்ளலாம்

இதனை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே எடுத்துச் சென்று, அவர்கள் பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்துமாறு கல்வி நிறுவன பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த விவரங்களை தங்களது கல்விநிறுவன இணையதளத்தில் பகிர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.